**செம்பாக்கம் நகராட்சியில் 29.1.2021ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைப்பெற்ற சாதாரணக்கூட்டத்தின் நடவடிக்கைகளின் நகல்.**

**கலந்துக்கொண்ட தனி அலுவலர் பெயர் மற்றும் பதவி:** **திருமதி. கா. ராஜலட்சுமி**
**தனி அலுவலர் / ஆணையாளர்**
**செம்பாக்கம் நகராட்சி**

**பொருள் எண்.1**

செம்பாக்கம் நகராட்சி ஆணையர் அவர்களின் ஜனவரி 2021 மாதத்திய நாட்குறிப்பேட்டினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.749** **பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.2**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் 29.12.2020ம் தேதிய ஆய்வு கூட்ட அறிவுரைகளின் படி, இந்நகராட்சி பகுதிகளில் உள்ள கட்டிடங்களில் கொசுப்புழு உற்பத்தியை கண்டறிந்து தடுத்தல் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணியினை 300 வீடுகளுக்கு ஒரு பணியாளர் வீதம் கொசு புழு தடுப்பு பணியாளர்கள் மூலம் டெங்கு நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்நகரராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்களுக்கு டெங்கு காய்ச்சல் உருவாக்கும் ஏடிஸ் கொசுப்புழு உருவாகும் இடங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் படி மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகள் பிரித்து வழங்கிட விழிப்புணர்வு ஏற்படுத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் இந்நகராட்சியின் 15 வார்டுகளிலும் உள்ள வீடுகளில் கடைகளில் அரசு மற்றும் தனியார் நிறுவன கட்டிடங்களில் சென்று அன்றாடம் கொசுப்புழு உற்பத்தியை கண்டறிந்து தடுத்தல் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக, இந்நகராட்சியில் உள்ள சுமார் 16650 குடியிருப்புகளுக்கும் விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் மற்றும் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை கையாளுவது தொடர்பாக ஸ்டிக்கர்கள் அச்சிட்டு விநியோகம் செய்ய உத்தேசிக்கப்பட்டது.

| வ. எண் | விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மக்கும் மற்றும் மக்காத குப்பை விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் (அ4 அளவில்) | 15000 நெ |
| 2 | டெங்கு காய்ச்சல் குறித்த விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் (அ4 அளவில்) | 15000 நெ |

மேற்படி ஸ்டிக்கர்களை அச்சடித்து பெறுவதற்கு உள்ளூர் அச்சு நிறுவனங்களிடம் தோராய மதிப்பீடு கோரப்பட்ட வகையில் இதற்கான தோராய செலவினம் ரூ.5.50 இலட்சம் ஆகும் என தெரிவிக்கப்பட்டது. மேலும், இப்பணிகளை ஒப்பந்தப்புள்ளிகள் கோரி செயல்படுத்த காலதாமதம் ஏற்படும் வகையில் அவசர அவசியம் கருதி கூட்டுறவு அச்சகங்களிடமிருந்து

விலைப்புள்ளிகள் கோரி அச்சிட்டு பெறுவதற்கும், அதற்கான தோராய செலவின ரூ.5.50 இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறதுது.

அலுவலக குறிப்பு:

1. இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கூட்டுறவு அச்சு நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.750 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

பொருள் எண்.3

செம்பாக்கம் நகராட்சிக்கு சொந்தமான போலிரோ வாகனம் எண். TN 11 AK 6142ல் ரேடியேட்டர் பழுது பணி மேற்கொள்ள தயாரிப்பு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட இந்தியா கேரேஜ் நிறுவனத்திடம் வாகனத்தை ஒப்படைத்து பணி செய்து முடிக்கவும், அதற்கான தோராய மதிப்பீட்டு தொகை ரூ.13500/–க்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.751 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

பொருள் எண்.4

செம்பாக்கம் நகராட்சியில் மாநில பேரிடர் மேலாண்மை நிவர் புயல் நிவாரண மாண்ய திட்டத்தின் கீழ் 20.1.2021ம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பார்வைக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | <u>மாநில பேரிடர் மேலாண்மை – நிவர் புயல் நிவாரண மாண்ய திட்டம்</u> மழையின் காரணமாக ஆங்காங்கு சாலைகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீரமைத்தல் பணி | 10.00 | எல். கிஷோர் குமார் | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| | | | எல். சதீஷ் குமார் | மதிப்பீட்டை விட 1.80% அதிகம் |

அலுவலக குறிப்பு:

1. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று, பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

தீர்மான எண்.752 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

பொருள் எண்.5

செம்பாக்கம் நகராட்சியில் பொறியியல் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும் ஆண்டு பராமரிப்பு பணிகளின் ஒப்பந்த காலம் 31.3.2021ம் தேதியுடன் முடிவடைவதால், 2021–2022-ம் நிதியாண்டில் கீழ்கண்ட பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. |
|---|---|---|
| 1 | வார்டு எண்.1 முதல் 7 வரை உள்ள சாலைகளில் குடிநீர் பைப்லைன் உடைப்பு மற்றும் கைபம்பு பழுது நீக்கம் செய்தல் பணி | 980000 |
| 2 | வார்டு எண்.8 முதல் 15 வரை உள்ள சாலைகளில் குடிநீர் பைப்லைன் உடைப்பு மற்றும் கைபம்பு பழுது நீக்கம் செய்தல் பணி | 980000 |
| 3 | வார்டு எண்.1 முதல் 7 வரை உள்ள மேல் நிலை நீர் தேக்கத் தொட்டிகளுக்கு நீரேற்ற மோட்டார் இயக்குதல், குடிநீர் விநியோகம் செய்தல் மற்றும் பகிர்மான குழாய்களில் உள்ள வால்வுகளை இயக்கி சீரான குடிநீர் விநியோகம் செய்ய தேவையான பணியாட்கள் சப்ளை செய்தல் பணி | 980000 |
| 4 | வார்டு எண்.8 முதல் 15 வரை உள்ள மேல் நிலை நீர் தேக்கத் தொட்டிகளுக்கு நீரேற்ற மோட்டார் இயக்குதல், குடிநீர் விநியோகம் செய்தல் மற்றும் பகிர்மான குழாய்களில் உள்ள வால்வுகளை இயக்கி சீரான குடிநீர் விநியோகம் செய்ய தேவையான பணியாட்கள் சப்ளை செய்தல் பணி | 980000 |
| 5 | செம்பாக்கம் நகராட்சியின் அலுவலக பராமரிப்பில் உள்ள கணினி, பிரிண்டர்கள் ஆண்டு பராமரிப்பு செய்தல் பணி | 200000 |
| 6 | வார்டு எண்.1 முதல் 7 வரையான வார்டு பகுதிகளில் உள்ள பொது குழாய்கள் பராமரிப்பு பணி | 500000 |
| 7 | வார்டு எண்.8 முதல் 15 வரையான வார்டு பகுதிகளில் உள்ள பொது குழாய்கள் பராமரிப்பு பணி | 500000 |
| 8 | நகராட்சி பகுதிகளில் 17 இடங்களில் மற்றும் அம்மா உணவகத்தில் உள்ள சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோக செய்யும் இயந்திரங்கள் ஆண்டு பராமரிப்பு செய்தல் பணி | 980000 |
| 9 | நகராட்சி பகுதியில் 145 இடங்களில் உள்ள சிறுமின்விசை மோட்டர்கள் ஆண்டு பராமரிப்பு செய்தல் பணி | 980000 |
| 10 | 16 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் குடிநீர் விநியோகம் செய்ய பணியாட்கள் சப்ளை செய்தல் பணி | 980000 |
| 11 | அலுவலக பராமரிப்பில் உள்ள நகலெடுக்கும் இயந்திரம் மற்றும் வண்ண நகலெடுக்கும் இயந்திரம் ஆண்டு பராமரிப்பு பணி மற்றும் தேவையான டோனர்கள் கொள்முதல் செய்தல் | 250000 |
| 12 | பசுமை உரக்குடில்களில் அமைக்கப்பட்டுள்ள பெரிய அறவை இயந்திரம் (Shredding Machine) ஒரு எண்ணிக்கை மற்றும் சிறிய அறவை இயந்திரங்கள் இரண்டு எண்ணிக்கை ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 200000 |
| 13 | செம்பாக்கம் நகராட்சியின் அலுவலக பராமரிப்பில் உள்ள 10 கேவிஏ | 200000 |

| | | |
|---|---|---|
| | ஆன்லைன் யுபிஎஸ். சர்வீஸ் செய்தல் மற்றும் 16 எண்ணிக்கை மின் கலன்கள் ஆண்டு பராமரிப்பு செய்தல் பணி | |
| 14 | அலுவலக பராமரிப்பில் உள்ள 125 கேவிஏ ஜெனரேட்டர்கள் 2 எண்ணிக்கை மற்றும் எம்எப் பேனல் போர்டு 2 எண்ணிக்கை ஆண்டு பராமரிப்பு செய்தல் பணி | 400000 |
| 15 | செம்பாக்கம் நகராட்சியின் பராமரிப்பில் உள்ள பூங்காக்களை காவல் பணிக்காக தேவைப்படும் பணியாட்களை சப்ளை செய்தல் பணி | 980000 |
| 16 | செம்பாக்கம் நகராட்சியின் பராமரிப்பில் உள்ள பூங்காக்களை பராமரிப்பு பணிக்காக தேவைப்படும் பணியாட்களை சப்ளை செய்தல் பணி | 980000 |
| 17 | குளோரினேஷன் அமைப்பில் உள்ள மின் மோட்டார்கள் பழுது நீக்கம் செய்தல் பணி | 300000 |

**அலுவலக குறிப்பு:**

1. மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் – 2021 நடைபெற உள்ளதால், தேர்தல் நன்னடத்தை விதி எந்த நேரத்திலும் அமுலில் வர உள்ளதால், அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

3. நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.753 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

செம்பாக்கம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும் ஆண்டு பராமரிப்பு பணிகளின் ஒப்பந்த காலம் 31.3.2021ம் தேதியுடன் முடிவடைவதால், 2021–2022-ம் நிதியாண்டில் கீழ்கண்ட பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | பொது சுகாதார பணிக்கு தேவையான பொருட்கள் மற்றும் தளவாடங்கள் சப்ளை செய்தல் பணி | 6.00 |
| 2 | பொது சுகாதார பணிக்கு தேவையான பிளிச்சிங் பவுடர் சப்ளை செய்தல் பணி | 2.00 |
| 3 | பொது சுகாதார பணிக்கு தேவையான சுண்ணாம்புத்தூள் (நீர்த்த சுண்ணம்) சப்ளை செய்தல் பணி | 2.00 |
| 4 | நகராட்சியில் உள்ள பொது சுகாதார பிரிவு வாகனங்கள் JCB-1 எண்ணிக்கை, காம்பாக்டர்கள் – 3 எண்ணிக்கை மற்றும் லாரி–1 எண்ணிக்கை தகுதிச்சான்று பெற ஆண்டு பராமரிப்பு செய்யவும், அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகள், ஆயில் மாற்றம் செய்யும் பணி மற்றும் வாகனங்களுக்கு தேவையான ஆயுள் காப்பீடு, சாலை வரி, பசுமை வரி இதர வரியினங்கள் செலுத்தும் பணி | 10.00 |
| 5 | பொது சுகாதார பணிக்கு பயன்படுத்தப்படும் TATA ACE 6 எண்ணிக்கையிலான வாகனங்கள் தகுதிச்சான்று பெற ஆண்டு பராமரிப்பு | 10.00 |

| | | |
|---|---|---|
| | செய்யவும், அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகள், ஆயில் மாற்றம் செய்யும் பணி மற்றும் வாகனங்களுக்கு தேவையான ஆயுள் காப்பீடு, சாலை வரி, பசுமை வரி இதர வரியினங்கள் செலுத்தும் பணி | |
| 6 | தெருநாய்கள் பிடித்து புளு கிராஸ் மூலம் கருத்த்டை, ARV வெறிநோய் தடுப்பு மருந்துகள் வழங்கிட ஆண்டிற்கு | 2.00 |
| 7 | Walky Talky ஆணையர், அலுவலர்கள் மற்றும் ஓட்டுநர்கள் / மேற்பார்வையாளர்கள் / வாகனங்களில் பொறுத்தி பணிகளை துரிதப்படுத்திட ஆண்டு வாடகை மற்றும் பராமரிப்பு | 2.00 |
| 8 | தமிழ்நாடு மெடிக்கல் சர்வீஸஸ் கார்ப்பரேசன் லிமிடெட் நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட மருந்துகள் சப்ளை செய்தல் பணி | 5.00 |
| 9 | பொது சுகாதார பிரிவிற்கு தேவையான படிவங்கள் நோட்டீஸ்கள், ஸ்டிக்கர்கள் அச்சிட்டு விநியோகம் செய்தல் பணி | 6.00 |

அலுவலக குறிப்பு:

1. மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் – 2021 நடைபெற உள்ளதால், தேர்தல் நன்னடத்தை விதி எந்த நேரத்திலும் அமுலில் வர உள்ளதால், அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

3. நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மான எண்.754 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

பொருள் எண்.7

செம்பாக்கம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் முதல் நிலை குப்பை சேகரிப்பு வாகனங்களாக பேட்டரியினால் இயங்கும் வாகனங்கள் 16 எண்ணிக்கை பயன்பாட்டில் உள்ளது. மேற்படி வாகனங்கள் கொள்முதல் செய்த நாள் முதலாக அவ்வப்பொழுது ஏற்படும் சிறு பழுதுகளை உடனுக்குடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில், தற்போது பெரும்பாலான வாகனங்கள் அவ்வப்பொழுது பழுதடைந்து நின்று பயன்படுத்த முடியாத சூழ்நிலை எற்படுவதால் சுகாதாரப்பணி பாதிப்படைகிறது. இதன் காரணமாக பொது மக்களிடமிருந்து குப்பைகள் உரிய நேரத்தில் எடுக்க இயலாததால் புகார்கள் வந்த வண்ணம் உள்ளது.

மேலும் பழுதடைந்த வாகனங்களை உடனடியாக பழுது நீக்கம் செய்யும் பணி மேற்கொள்வது அவசியமாகிறது. இதற்காக தொடர்புடைய பழுது நீக்கம் செய்யும் நிறுவனங்களிடமிருந்து ஆண்டு பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு தோராய செலவினம் கோரப்பட்ட வகையில் ஒரு வாகனத்திற்கு உத்தேச செலவினம் தொகை தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பழுது நீக்க விவரம் | பேட்டரி வாகனங்களின் எண்ணிக்கை | ஒரு வாகனத்திற்கான செலவினம் தொகை ரூ. | மதிப்பீடு தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | பேட்டரியில் இயங்க கூடிய | 16 | 21000 | 3.36 |

| | | | | |
|---|---|---|---|---|
| | வாகனங்களை பழுது நீக்கம் செய்வதற்கு பணியாட்கள் கட்டணம் | | | |
| 2 | பேட்டரியில் இயங்க கூடிய வாகனங்களை பழுது நீக்கம் செய்வதற்கான புதிய உதிரி பாகங்களுக்கான தொகை (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) | 16 | 25000 | 4.00 |
| | | | மொத்தம் | 7.36 |

எனவே, 16 எண்ணிக்கையிலான வாகனங்களுக்கு ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.7.36 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. தோராய செலவின மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.755 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

செம்பாக்கம் நகராட்சிக்கு கீழ்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவற்றிற்கான நகர் மன்றம் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை முழுவதும் டிசம்பர் 2020 மாதத்துடன் முடிவடைவதால், ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கும் வரை ஏற்கனவே பணி உத்திரவு வழங்கப்பட்ட ஒப்பந்ததாரர் மூலம் அதே ஒப்பந்த விலை விகிதத்தில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்ட மதிப்பீடு தொகை | அனுமதிக்க பட்ட தீர்மான எண் மற்றும் நாள் |
|---|---|---|---|
| 1 | 16 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் குடிநீர் விநியோகம் செய்ய பணியாட்கள் சப்ளை செய்தல் பணி | 9.80 | 635<br>31.3.2020 |
| 2 | வார்டு எண்.8 முதல் 15 வரை உள்ள சாலைகளில் குடிநீர் பைப்லைன் உடைப்பு மற்றும் கைபம்பு பழுது நீக்கம் செய்தல் பணி | 9.80 | 635<br>31.3.2020 |
| 3 | நகராட்சி பகுதியில் 130 இடங்களில் உள்ள சிறுமின்விசை மோட்டார்கள் பராமரிப்பு செய்தல் பணி | 5.00 | 708<br>29.10.2020 |

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம், கூடுதல் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். |

**தீர்மான எண்.756** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

செம்பாக்கம் நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டம் குப்பை சேகரிக்கும் பணிக்காக பயன்பாட்டில் உள்ள காம்பாக்டர் வாகனம் TN11 Q 6615க்கு 4.2.2021ம் தேதியில் மோட்டார் வாகன ஆய்வாளரின் தகுதிச் சான்று முடிவு பெறுகிறது. மேற்காணும் வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுது பணிகளை மேற்கொள்ள வேண்டி அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையில் பழுது விவரங்கள் கோரப்பட்டது. அப்பணிமனையின் தொழில் நுட்ப பணியாளரை கொண்டு ஆய்வு செய்த வகையில், வாகனத்தில் கீழ்காணும் அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ள வேண்டும் எனவும், இதற்கான தோராய செலவினமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | தோராய மதிப்பீடு |
|---|---|---|
| 1 | **Providing Complete Repair Works to Public Health Vehicle Compactor TN11 Q 6615**<br>Clutch Major OH, Brake OH, Kingpin OH, All oil filter renewal, Joint OH, All Spring R/C, Tinkering, Complete Painting, Door Work, Self Motor OH, Dynamo OH, Electrical Work, Hydraulic OH, Letters and Stickering, Lioning Work, Speed Governer renewal. | **Rs.148500** |

மேலும், வாகன பராமரிப்பின் கீழ் 2020–21ம் ஆண்டிற்கு இந்நகர் மன்ற தீர்மானம் எண்.621 நாள் 28.2.2020ன் படி இத்தலைப்பின் கீழ் ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படி நிதி ஒதுக்கீட்டு தொகையினை கொண்டு பொது சுகாதார வாகனங்களில் அவ்வப்பொழுது ஏற்படும் பழுது பணிகளையும், மோட்டார் வாகன ஆய்வாளரின் தகுதி சான்று பெற தக்க வகையில் வாகனங்களை பழுது நீக்கம் செய்த வகையிலும் ரூ.995500/– செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒதுக்கீட்டு தொகையில் போதிய நிதி இல்லாத காரணத்தினால் ஏற்கனவே ஆண்டு ஒப்பந்தப்புள்ளியில் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்ததாரர் மெஸ்ஸர்ஸ் எம்.கே.எஸ். மோட்டார்ஸ் நிறுவனத்திடம் வாகனம் ஒப்படைப்பு செய்து அதே விலை விகித அடிப்படையில் இப்பணிகளை மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.153000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. அவசர அவசியம் கருதி இந்நகர் மன்ற தீர்மானத்தை எதிர்நோக்கி தனி அலுவலரின் மன்ற முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பின்னேற்பு அங்கீகாரம் வழங்கலாம்.
2. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.757** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

பொருள் எண்.10

செம்பாக்கம் நகராட்சி பொது சுகாதார பிரிவு டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் நகராட்சி பகுதியில் உள்ள 16585 வீடுகள் 927 கடைகள் மற்றும் காலி மனைகள், புதியதாக கட்டுமானங்கள் மேற்கொள்ளும் இடங்கள், நாள்பட்ட மக்கள் பயன்பாடில்லா கட்டிடங்கள், நாள்பட்ட பூட்டிய குடியிருப்புகள், கோயில்கள், மசூதிகள், சர்ச், பார்க்குகள் மற்றும் இதர அரசு மற்றும் அரசு சாரா கட்டிடங்கள், கல்விக்கூடங்கள் இன்னபிற இடங்களில் கொசுப்புழுக்கள் உற்பத்தியாகி டெங்கு, சிக்கன் குன்யா, மலேரியா, யானைக்கால் போன்ற பூச்சிகள் மூலம் பரவும் வியாதிகளை தடுக்கும் விதமாக DBCக்களை கொண்டு பணி மேற்கொள்ள, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ஒ.மு.எண்.13433/2018/ஜெ1 நாள் 17.9.2018ன் படி, மாவட்ட ஆட்சியர் விலை விகிதத்தில் 55 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களுடன் 10 பேர் Rapid Response Team (RRT) டெங்கு தடுப்பு நடவடிக்கை (டெங்கு காய்ச்சல் கண்ட பகுதிகளில்) விரைவு செயலாக்க குழுவிற்கு 10 பேர் சேர்த்து 65 DBCக்களை (Outsourcing) நியமித்து கொள்ள ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி மூலம் முதற்கட்டமாக மூன்று மாதங்களுக்கு பணியில் ஈடுபடுத்திக் கொள்ள இந்நகர் மன்றம் தீர்மானம் எண். 715 நாள் 29.10.2020ல் ஒப்புதல் பெறப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த மெஸ்ஸர்ஸ். சேகர் அன்டு கோ நிறுவனதிற்கு 28.10.2020ம் தேதியில் பணி உத்திரவு வழங்கப்பட்டு அந்நிறுவனம் மூலம் 1.11.2020 முதல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 31.1.2021ம் தேதியுடன் முடிவடைவதாலும், எதிர் வரும் பருவ நிலை மாறுவடும் காலத்தில் நோய் தொற்று ஏற்படாமல் பொது மக்களை பாதுகாக்க வேண்டி, இப்பணியினை அதே ஒப்பந்ததாரர் மூலம் அதே விலை விகித அடிப்படையில் தொடர்ந்து அடுத்த மூன்று மாதங்களுக்கு ஈடுபடுத்திடவும் அதற்கான செலவினத் தொகை ரூ.25.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினத் தொகையினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொது சுகாதார நலன் கருதி அடுத்த மூன்று மாதத்திற்கு கால நீட்டிப்பு செய்ய அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.758 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

பொருள் எண்.11

செம்பாக்கம் நகராட்சி பொது நிதி 2021-22-ன் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளுக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைகும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.4ல் சாய் பாபா கோவில் தெருவில் உள்ள பொது கிணறு கிரில் அமைத்தல், வார்டு எனண.5 குடிசை மாற்று வாரியம் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணி வார்டு எண்.10 வினை தீர்த்த வினாயகர் கோயில் தெருவின் நுழைவாயிலில் உடைந்துள்ள மழைநீர் வடிகால்வாயினை சீரமைத்தல், வார்டு எண்.12, விவேகானந்தர் தெரு | 3.20 |

| | | |
|---|---|---|
| | சிறுபாலம் பழுது பார்த்தல் பணி | |
| 2 | வார்டு எண்.14 ஐய்யபா நகர் மெயின் ரோடு மழைநீர் வடிகால்வாய் உயர்த்தி அமைத்தல் பணி | 1.70 |
| 3 | வார்டு 1 முதல் 15 வரை குடிநீர் பகிர்மான குழாய் விடுப்பட்ட தெருக்களில் பகிர்மான குழாய் பதித்தல் பணி | 9.80 |
| 4 | வேளச்சேரி மெயின் ரோடு காமராஜபுரம் மெயின் ரோடு சந்திப்பு பகுதியில் கழிவுநீர் வெளியேற்ற குழாய் பதித்தல் பணி | 2.20 |

அலுவலக குறிப்பு :–

1. தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.759 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.12**

தமிழக அரசு மூலம் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் 144 தடை உத்திரவி பிறப்பிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளதால், அவசர அவசியம் கருதி இந்நகராட்சியில் 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம் மற்றும் செலவினத் தொகை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | செம்பாக்கம் நகராட்சி பகுதியில் வார்டு வாரியாக 1.11.2020 முதல் 30.11.2020 வரையான காலத்திற்கு பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த ஆட்டோ மைக் செட் மூலம் விளம்பரம் செய்தது வண்டி வாடகை, எரிபொருள், படிகள் மற்றும் இதர செலவுகள் உட்பட வாடகை தொகை ஒப்பந்ததாரர் திரு. கே. ராம்தாஸ் வழங்கியது | 54000 |

அலுவலக குறிப்பு: அவசர அவசியம் கருதி 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுக்கு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.760 செலவினங்கள் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.13**

செம்பாக்கம் நகராட்சியில் அலுவலக பயன்பாட்டுக்கு தேவையான படிவங்கள் பதிவேடுகள் அச்சடித்து வழங்குதல் மற்றும் எழுது பொருட்கள் சப்ளை செய்தல் பணிக்காக ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து இந்நகர் மன்ற தீர்மானம் எண்.629 நாள் 28.2.2020ல் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி கொள்முதல் செய்யப்பட்டது. இந்நிலையில் அவசர அவசியம் கருதி அதே ஒப்பந்ததாரர் மூலம் ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட விலை விகித அடிப்படையில் எழுது பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டது. ஒதுக்கீடு தொகையினை விட

கூடுதலாக ரூ.131203/—ற்கு செலவினம் செய்தமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** கூடுதல் செலவினத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.761** **செலவினங்கள் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

பொருள் எண்.14

செம்பாக்கம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகராட்சி பகுதியில் உருவாகும் விற்பனைக்கு அல்லாத மறு சுழற்சிக்கு பயன்படாத, மறு பயன்பாட்டிற்கு உட்படுத்த இயலாத திடக்கழிவுகளை சேகரித்து சென்னை பெருநகர மாநகராட்சி அவர்களின் அனுமதியின் படி மூன்று மாத காலத்திற்கு அனுமதி வழங்கியதை தொடர்ந்து 23.9.2020 முதல் 31.12.2020 வரை கொடுங்கையூர் உரக்கிடங்கில் இந்நகராட்சியின் தினசரி சேகரமாகும் மக்காத குப்பைகள் கொட்டப்பட்டு வருகிறது. மேற்படி அனுமதி காலம் 31.12.2020 உடன் முடிவடைய உள்ள நிலையில் தற்போது வரை தேசிய பசுமை தீர்ப்பாயம் வேங்கடமங்கலம் உரக்கிடங்கின் மீதான தடை தொடர்வதாலும், செம்பாக்கம் நகராட்சியில் சேகரமாகும் மக்காத குப்பைகளை கொடுங்கையூரில் கொட்டுவதற்கு அனுமதியினை நீட்டித்து வழங்கிட கோரப்பட்டது.

சென்னை பெருநகர மாநகராட்சியின் மூலம் அனுமதி வழங்கப்படாத நிலையில், இந்நகராட்சியில் நாள்தோறும் உருவாகும் 10 முதல் 12 டன் வரை உலர் கழிவுகளை வேறு எங்கும் எடுத்து சென்று சேர்ப்பதற்கு வழிவகை இல்லாததால் பொது சுகாதார நலன் கருதி மற்றும் கொரோனா பெருந்தொற்று காலத்தில் குப்பைகளை தேங்க விடாமல் தொற்று நோய் பரவுவதை தடுக்கும் விதமாகவும், ஒரு முறை 7 முதல் 10 மெட்ரிக் டன் உலர் கழிவுகளை கொண்டு செல்வதற்கு ரூ.12000/— வீதம் (டிப்பர் லாரி வாடகை, டிரைவர் பேட்டா, டீசல், ஆயில், ஏற்றுக்கூலி மற்றும் இதர செலவினங்கள் உட்பட) கணக்கீடு செய்து, அவசர அவசியம் கருதி உள்ளூர் வாகன உரிமையாளர்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று, குறைந்த விலைப்புள்ளி அளிக்கும் வாகன உரிமையாளர் மூலம் பணி மேற்கொள்ளவும், இதற்கான செலவின தொகையாக ரூ.5.00 இலட்சத்திற்கு இந்நகர் மன்ற தீர்மானம் எண். 648 நாள் 11.1.2021ன் படி ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் செயல்படுத்தப்பட்டது.

இந்நிலையில் இப்பணிகளுக்காக ஒதுக்கீடு செய்த தொகை 25.1.2021ம் தேதியுடன் முடிவடைந்த நிலையில் தொடர்ந்து பணிகளை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதால் அவசர அவசியம் கருதி ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்தில், அதே ஒப்பந்ததாரர் மூலம் தொடர்ந்து பணி மேற்கொள்ள இத்தலைப்பின் கீழ் கூடுதலாக செலவினத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. இதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி ஏற்கனவே அனுமதி அளிக்கப்பட்ட விலை விகித அடிப்படையில் அதே வாகன உரிமையாளர் மூலம் பணி மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அங்கீகாரத்திற்கு.

**தீர்மான எண்.762** **அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

தனி அலுவலர்
செம்பாக்கம் நகராட்சி